## மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்
## மேட்டூர்.
## OS.No. 136/2024
## வழக்கு சாட்சி PW.2

| | | | |
|---|---|---|---|
| பெயர் | மாதேசன் | கணவர் பெயர் | : |
| தகப்பனார் பெயர் | சின்ராயன் | வயது | : 55 |
| கிராமம் | கொளத்தூர் | நாள் | : 20.11.2025 |
| தாலுகா | மேட்டூர் | | |
| மாவட்டம் | சேலம் | | |

**முதல் விசாரணை :**

நான் இவ்வழக்கில் மூன்றாம் தரப்பினர் ஆவேன். வாதிகள் தரப்பில் 2வது சாட்சியாக சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். நான் இன்று தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். அதில் உள்ள சங்கதிகள் யாவும் என்னால் சொல்லப்பட்டு தயார் செய்யப்பட்டவையாகும். ஆவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

**பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:–**

1) நீதிமன்றத்திலிருந்து சாட்சியம் அளிக்க அழைப்பாணை வழங்கப்பட்டதா என்றால் இல்லை. 2ம் வாதி மலர்விழி அழைத்ததனன் பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேனா என்றால் ஆமாம். நான் வாதிகளின் உறவினரா என்றால் ஆமாம். வாதிகள் ராஜகோபால் அவர்களின் வாரிசு சான்றிதழ் கோரி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளனர். ராஜகோபால் இறந்து சுமார் 2 வருடங்கள் இருக்கும். ராஜகோபாலுக்கு ஏற்கனவே பூங்கொடி என்பவருடன் திருமணம் ஆகியிருந்தது. அவர்கள் இருவருக்கும் விவாகரத்து நடந்துவிட்டது. அவர்களுக்கு பிறந்த கௌரிசங்கர் திருமணம் செய்து கொள்ளாமல், வாரிசுகள் எதுவும் இல்லாமல் இறந்துவிட்டார்.

2) அதன் பிறகுதான் ராஜகோபால் 1ம் வாதியை திருமணம் செய்து கொண்டார். 1ம் வாதி பார்வதிக்கும் ஏற்கனவே ராமசாமி என்பவருடன் திருமணம் ஆகி, அவர்கள் இருவருக்கும் விவாகரத்தும் ஆகிவிட்டது. அந்த உயிலில் உள்ள விவரங்கள் தெரியுமா என்றால் 2ம் வாதி மலர்விழியை ராஜகோபால் தத்துபிள்ளையாக எடுத்துக்கொண்டதால் அவருக்கு ஆதரவாக எழுதி வைத்துள்ளார். என்னுடன் முருகன் என்பவரும் சாட்சி

கையொப்பம் செய்துள்ளார். ராஜகோபாலுக்கும், 1ம் வாதிக்கும் கொளத்தூர் பெருமாள் கோவிலில் திருமணம் ஆனது. திருமணம் ஆன சமயத்தில் நானும், உயில் ஆவணத்தில் சாட்சி கையெழுத்து செய்த முருகன், மற்றும் ராஜகோபலின் உறவினர்களான மோகன், புஷ்பா ஆகியோர்கள் இருந்தோம். ராஜகோபாலின் தாய், தந்தையும் நீண்ட காலத்திற்கு முன்பே இறந்துவிட்டனர். ராஜகோபால் இறப்பிற்குண்டான இறுதி காரியங்கள் அனைத்தும் வாதிகள் தான் செய்தனர், நானும் உடன் இருந்தேன்.

ஒம்/−திரு. M.செல்வம்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.